தமிழியல்

JOURNAL OF TAMIL STUDIES

December 2014

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
திருவள்ளுவர் ஆண்டு 2045, ஜய, மார்கழி - தை

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
Taramani,Chennai - 600 113. Tamilnadu,India.
ISSN No.0022-4855 Vol No.86 Issue: December 2014

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

Board of Governors

DECEMBER 2014

CHAIRMAN

Thiru. K.C. VEERAMANI

Hon'ble Minister for School Education, Tamil Official Language, Archeology and Tamil Culture, Govt. of Tamil Nadu

VICE-CHAIRMEN

SECRETARY TO GOVERNMENT
Tamil Development and Information Department, Govt. of Tamil Nadu.

Vice-Chancellor
University of Madras, Chennai.

Vice-Chancellor
Annamalai University, Annamalai Nagar

Vice- Chancellor
Madurai Kamaraj University, Madurai.

Vice-Chancellor
Tamil University, Thanjavur.

MEMBERS

SECRETARY TO GOVERNMENT
Finance Department, Govt. of Tamil Nadu.

Dr. F. GROS
Former Director, French Institute of Indology, Pondicherry (IATR-Representative)

DIRECTOR
Central Institute of Indian Languages, Mysore.

MEMBER SECRETARY

Dr. G. Vijayaraghavan
Director, International Institute of Tamil Studies, Chennai.

தமிழியல்

JOURNAL OF TAMIL STUDIES

December 2014

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

திருவள்ளுவர் ஆண்டு 2045, ஜய, மார்கழி - தை

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

TARAMANI, CHENNAI - 600 113. TAMILNADU, INDIA.

ISSN No. 0022-4855 Vol. No. 86 Issue: December 2014

BOARD OF EDITORS

Dr. G.L. HART
Dept. of South and South East Asian Studies, University of California, U.S.A.(Retd.)

Dr. A. VELUPILLAI
Former Professor of Tamil, University of Jaffna, Srilanka.

Dr. S.N. KANDASAMY
Former Professor of Tamil, Tamil University, Thanjavur.

Dr. Pon. KOTHANDARAMAN
Former Vice-Chancellor, University of Madras, Chennai.

Dr. G. VIJAYARAGHAVAN
Editor-in-C hief

Dr. B. RAJA
Associate Editor

Editorial Board
Dr. P. SELVAKUMAR
Dr. A. THASARATHAN
Dr. M.J. RABI SINGH
Kalaimamani MARAIMALAIYAN

CONTENTS

Chief Editor's Note 1

1. பேராயர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல்
(1814 - 1891) **கோ. கணேஷ்** 3

2. 2000 YEARS OLD URN FOUND 5

3. *மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை (1815 - 1876)*
இ.சுந்தரமூர்த்தி 6

4. INTERNATIONAL JOURNAL OF TAMIL CULTURE AND CIVILIZATION THANI NAYAGAM ADIKALARS BIRTH CENTENARY 1913-2013 **S. MARUDHANAYAGAM** 8

5. SOME PARALLELS BETWEEN CONFUCIANISM AND THIRUVALLUVAM **SINGARAVELU SACHITHANANTHAM** 12

6. தொல்காப்பியக் கல்வி **இ. சுந்தரமூர்த்தி** 18

7. MUSIC AND MUSICAL INSTRUMENTS
GIFT SIRONMONEY 26

8. FROM INDUS VALLEY TO COASTAL TAMIL NADU
Strong resemblances between graffiti symbols 30

9. *சங்ககால மீனவர்களின் பண்பாட்டுச் சூழலியல்*
சண்முகராஜா சிறிகாந்தன் 32

10. THE HISTORY OF TAMIL RESEARCH
XAVIER S. THANINAYAGAM 40

11. PRE - HISTORIC HUMAN PRESENCE IN THANJAVUR 52

12. நாமக்கல்லாரின் திருக்குறள் உரை தெளிவு
சு. தமிழ்ச்செல்வி 54

13. REFLEXIVE FORMATION- FUNCTION-
EXPANSION IN MODERN TAMIL PAWATHY NALLIANNAN &
K. KARUNAKARAN 58

14. WORDS FOR 'DOG' AND 'HORSE'
IN FINNISH AND TAMIL STEPHAN HILLYER LEVITT and
H. P. A. HAKOLA 65

15. INDEX OF THE JOURNAL OF TAMIL STUDIES
VOL. 23 – 32 P. KAVITHA 84

16. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன
முனைவர் பட்ட ஆய்வேடுகள் இரா. பெருமாள் சாமி 93

17. TAMIL SCHOLARS FROM OVERSEAS 97

18. MUTTS IN THIRUCHIRAPPALLI DISTRICT
(C.E. 600 - 1300) R.AKILA AND M.NALINI 99

19. TRANSLATIONS OF ANCIENT TAMIL LITERARY WORKS 103

20. நூல் மதிப்புரை வெ. மகாலட்சுமி 105

REGULATIONS FOR SUBMISSION OF RESEARCH
PAPERS 108

Chief Editor's Note

Dear Readers

I wish and hope that the revised edition of the *Journal of Tamil Studies* fulfills the dreams and goals of Rev.Dr.Xavier Thaninayagam Adigalar who was chiefly instrumental in establishing the International Institute of Tamil studies and this journal.

Literary Ambassador Thaninayagam Adigalar's valuable worldwide special lectures on Tamil language and literature, the journal *Tamil Culture* and the earlier issues of this journal which was prescribed over by Adigalar pulled the attention of scholars like *Filioya, Kamil Zvelebil, M.Anthiranov, M.B.Emmanno*, Arnoleman, Quber, J.R.Maar, Edgar Golton, Thomas Barrow and turned them into full time Tamil scholars and dedicated to Tamil research, I wish the forth coming issues too would pursue, the same course and sustain Adigalar's dreams.

I request indigenous and International Tamil scholars to contribute research articles to enrich the journal to International standards.

In addition to scholars of language and literature, others in the field of studies like art and architecture, history, ethnomusicology, art history, painting, sculpture and sociology are also welcome to give their valuable contributions to the forth coming issues.

In order to encourage the young scholars and the research students of the Tamil studies, we wish to furnish worldwide research informations and source materials for their research through this journal.

Readers are welcome to express their views regarding the journal under 'Reader's forum'.

I am really happy to inform you that on behalf of the Government of Tamil Nadu, our beloved leader Honourable Miss. J. Jayalalitha has liberally sanctioned the following schemes to develop the Tamil language and literature through the International Institute of Tamil Studies.

1. Rs. 34,00,000/- (Rupees thirty four lakhs only) to establish a Centre for the preservation of Tamil palm leaf manuscripts.
2. Rs. 14,00,000/- (Rupees fourteen lakhs only) to install a research Language Lab.
3. Rs. 10,00,000/- (Rupees ten laksh only) for the digitalisation of the rare books available in our Institute.

4. Rs. 16,00,000/- (Rupees sixteen lakhs only) in order to compile an encyclopedia for the ancient Tamil language.
5. Rs. 15,00,000/- (Rupees fifteen lakhs only) to publish the classical Tamil books upto 12th century.

I wish to express my hearty thanks to our Honourable Education Minister and the Chairman of our Institute Thiru.K.C.Veeramani and the secretary to the Departments of Tamil Development and Information and the Vice-Chairman of our Institute Dr.M.Rajaram IAS for participating in the 48th Governing council meeting and their immense help, guidance and encouragements for the growth and development of the Institute and the Journal of Tamil studies.

Wish you a happy Tamil New Year.

Dr.G.Vijayaragavan

மேலைநாட்டுத் தமிழறிஞர்கள் வரிசை

பேராயர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் (1814 - 1891)

கோ. கணேஷ்

கால்டுவெல்லின் இயற்பெயர் இராபர்ட் என்பதாகும். அவர் கி.பி.1814இல் அயர்லாந்தில் உள்ள கிளாடி எனும் ஊரில் கால்டுவெல் தம்பதியினர்க்கு மகனாகப் பிறந்தார். கிளாஸ்கோ எனும் நகரத்தில் பள்ளி, கல்லூரிப் படிப்புகளை முடித்தார். அவர் சமயப் பணியாளராக நியமிக்கப்பட்டு, இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். கடல்வழிப் பயணத்தின் மூலமாகத் தமிழகம் வந்தடைந்த அவர், அப்பயணத்தின் நடுவே இந்திய மொழிகளான சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளைக் கற்றார். மேலும் அப்பயணத்தின் போது சென்னை அரசு அலுவலரான சி.பி.பிரௌனுடன் நட்புக் கொண்டார்.


பேராயர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல்

1841இல் கால்டுவெல் சென்னையிலிருந்து கிழக்குக் கடற்கரை சாலைவழியாக நடைப்பயணம் மேற்கொண்டு திருநெல்வேலி மாவட்டதிலுள்ள இடையன்குடியை அடைந்தார். அங்கிருந்தே சமயப் பணியாற்ற முடிவுசெய்தார். அதற்காகத் தாம் தங்குவதற்கு ஒரு வீட்டையும் சமயப்பரப்புரைக்காக வழிபாட்டுத் தளத்தையும் கட்டினார்.

அங்குப் பல பள்ளிக்கூடங்களைத் தொடங்கி நடத்தினார். அதில் பெண்களுக்கெனத் தனிப் பள்ளியொன்றையும் உருவாக்கினார். 1844இல் எலிசா என்பவரைக் கால்டுவெல் திருமணம் செய்து கொண்டார். இவரும் கால்டுவெல்லுடன் சேர்ந்து சமூகப் பணியாற்றினார்.

நன்கு சரளமாகத் தமிழ் பேசத் தெரிந்த எலிசா இடையன்குடி பெண்கள் பள்ளியில் ஆசிரியராகவும் அவ்வூரில் நோயுற்றவர்களுக்கு மருத்துவ உதவி செய்தும் வந்தார். இவரின் தமிழறிவு பின்னாளில் கால்டுவெல் தமிழில் ஆய்வுமேற்கொள்ளப் பெரிதும் உதவியது. கால்டுவெல் தமது இறுதிக் காலத்தில் தம் மகளுடன் கொடைக்கானலில் தங்கியிருந்தார். அவர் 1891இல் மறைந்தார்.

கால்டுவெல்லின் தமிழ்ப்பணி

தமிழ்மொழியில் முதன்முதலில் ஒப்பியலாய்வு முறையை அறிமுகப்படுத்தியவர் கால்டுவெல். குறிப்பாக 1856இல் *திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (A Comparative Grammar of Dravidian or South Indian Languages)* என்ற நூலை வெளியிட்டார். இந்நூலினை ஒப்பிலக்கணத் துறையைச் சார்ந்த முன்னோடி நூல்களுள் ஒன்றாகக் குறிப்பிடலாம்.

1849இல் *திருநெல்வேலி சாணார்கள் ஒரு சரித்திரம்* என்ற நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டார். இதுவே அவரின் முதல் நூலாகும்.

1881இல் *திருநெல்வேலி சரித்திரம்* என்ற நூலைச் சென்னை அரசின் பணவுதவியுடன் வெளியிட்டார். இந்நூலை எழுதியதற்காகக் கால்டுவெல்லுக்கு ஆயிரம் ரூபாய் மதிப்பூதியமாக அளிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் கால்டுவெல் தென்தமிழ் நாட்டின் பாளையக்காரர்கள் வரலாற்றை விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார். 1881இல் *திருநெல்வேலி மிஷன் ஆவணங்கள்* என்ற நான்காவது நூலை வெளியிட்டார். அவருடைய மரணத்திற்குப்பின் 1894இல் அவருடைய ஐந்தாவது நூலான பிஷப் கால்டுவெல் நினைவுக் குறிப்புகள் என்ற நூல் வெளியானது. இதனைக் கால்டுவெல்லின் மருமகன் வெளியிட்டுள்ளார்.மேலும் 1893இல் பரதகண்ட புராணம் என்ற சிறுநூலும் வெளிவந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நூல்களின் வழியாகக் கால்டுவெல் தமிழில் ஒப்பியலாய்வு முறையையும் தமிழ்நாட்டு வரலாற்று ஆவணங்களையும் முன்னெடுத்துள்ளார். மேலும் அவர் பல்வேறு கட்டுரைகளின் வாயிலாகவும் தமிழ் ஆராய்ச்சியை விரிவுபடுத்தியுள்ளார்.

அவற்றில் *தொல்காப்பியம் நன்னூல்* போன்ற இலக்கணங்களைக் கற்கவும் அவற்றை மேலாய்விற்குப் பயன்படுத்தும் வழிவகைகளையும் முன்மொழிந்துள்ளார். மார்க்கோபோலோ காயல் பற்றிக் குறிப்பிடுவதைக் கண்டு தமிழகம் முற்காலத்தில் மேலைநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளைச் சான்றாதாரங்களுடன் வெளியிட்டுள்ளார். குறிப்பாக, ஹீப்ரு மொழியிலும் கிரேக்க மொழியிலும் தமிழ்ச் சொற்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். மயில் இறகைக் குறிக்கும் தோகை என்பது துகி என்று ஹீப்ரு மொழியில் வழங்குவதையும், அரிசி என்ற சொல் கிரேக்க மொழியில் அருசா என்று வழங்குவதையும் குறிப்பிட்டுள்ளார்.

கால்டுவெல் வரலாற்றுத் துறையிலும் அகழ்வாராய்ச்சித் துறையிலும் மிகுந்த ஈடுபாடுடையவராகத் திகழ்ந்தார். வரலாற்றுச்சிறப்புடைய 'புன்னைக்காயல் கொற்கை'

என்னும் இடங்களில் அகழ்வாய்வு செய்து அவற்றின் சிறப்பினை உலகறியச் செய்தார். அவர் சமயநூல்கள் சிலவும் எழுதியுள்ளார். *நற்கருணைத் தியான மாலை, தாமரைத் தடாகம், ஞானக் கோயில்* ஆகிய உரைநடை நூல்களையும் படைத்துள்ளார். இவர் பாடிய கிறித்துவப் பாடல்கள் இன்றும் ஆலயங்களில் பாடப்பட்டு வருகின்றன. தமிழ்மொழி வரலாற்றில் கால்டுவெல்லின் தமிழ்ப்பணி என்றென்றும் நிலைத்து இருக்கும் என்பதில் ஐயமில்லை.

(தொடரும்)

தொகுப்பு: *கோ. கணேஷ், முனைவர்பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*

2000 years old urn found



Coimbatore: Farmer Nachimuthu's half an hour work to dig a pit to plant a coconut sapling on his farm at Malayandipattinam, near Pollachi has made him touch a piece of the 2,000 year - old history.

He found an red and black urn, which is now kept at the museum of the PSG college of Arts and Science.

The 70-cm urn, belonging to the Sangam period, tapers at the bottom and widens near the mouth. It has a 30-cm diameter in the middle.

A careful examination of the urn, says Associate Professor S.Ravi of the college, reveals that the only embellishments are the decorations using nail marks near the mouth. Even the surface is coarse, suggesting that the potters had not used the clay of refined earth.

SOURCE: *THE HINDU 19TH NOVEMBER 2014*



மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை (1815 - 1876)

இ.சுந்தரமூர்த்தி

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை தமிழ் முழுதறிந்த தகைமையாளராக விளங்கியவர். இளமையிலேயே தந்தையார் சிதம்பரம்பிள்ளையிடம் கற்றுப் புலமைபெற்றவர். செய்யுள் இயற்றும் திறமை அவருக்கு இளமையிலேயே வாய்த்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுக நாவலர், வடலூர் வள்ளலார் இராமலிங்கம்பிள்ளை ஆகியோரின் சமகாலத்தவர்.

மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் கற்றவர்கள் சிறந்த தமிழ்ப்புலமை கொண்டு விளங்கினார்கள். தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் இவருடைய மாணவர். மாயூரம் நீதிபதி வேதநாயகம், புதுவை சவரிராயலு நாயகர், ஆரியங்காவற் பிள்ளை, வல்லம் கந்தசாமி பிள்ளை எனப் புகழ்பெற்ற அறிஞர்கள் இவருடைய மாணவர்களாய் விளங்கினார்கள்.

'இவருடைய வீடு ஒருகலைமகள் நிலையமாகத் திகழ்ந்தது. தம்பால் வரும்பல மாணக்கர்களுக்கும் பாடம் சொல்லுவதும், தம்மைப்பார்க்க வந்த பிரபுக்களிடம் தமிழ் நூல்களிலுள்ள அருமையான செய்திகளைக் கூறி மகிழ்வித்தலும், புதிய செய்யுட்கள் இயற்றுதலும் ஆகிய தமிழ்த் தெய்வ வழிபாடுகளே காலை முதல் இரவு நெடுநேரம் வரையில் இவருடைய வேலையாக இருந்தன.' என்று உ.வே.சா இவருடைய வரலாற்றில் குறிப்பிடுவது பெரிதும் கருதத்தக்கது. எதைமறந்தாலும் தமிழை மறவாத தவமுடையவராக மகாவித்துவான் விளங்கினார்.

நினைத்தமாத்திரத்தில் கவிபாடும் வல்லமையைப் பெற்றிருந்த மகாவித்துவான் புகழ்பெற்ற பன்னூல்கள் பலவும் படைத்தவர். இருபத்திரண்டு தலபுராணங்களைப் படைத்தவர் மான்மியம், காப்பியம், பதிகம், பதிற்றுப்பத்தந்தாதி, திரிபந்தாதி, யமக அந்தாதி, வெண்பா அந்தாதி, மாலை, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, உலா, தூது, குறவஞ்சி, சிலேடை வெண்பா என எண்பது நூல்களுக்கு மேல் படைத்த பெரும்புலவர். இன்னும் அச்சாகாத பிரபந்தங்கள் பலவும் உண்டு.

மகாவித்துவானுடைய கவித்திறமையை அறிஞர் பின்வருமாறு பாராட்டிப் போற்றியுரைப்பது குறிப்பிடத்தக்கது.

எனைவைத்தி எனைவைத்தி எனப்பதங்கள்
இடைஇடை நின்றிரந்து வேண்ட
இனிவைப்பாம் இனிவைப்பாம் பொறுத்திடுமின்
பொறுத்திடுமின் என்று கூறி
நினைவுற்ற ஒருகடிகைக்கு அளவில்
கவித்தொடை கொடுத்து நிமலர்பூணப்
புனைவுற்ற மீனாட்சி சுந்தர வள்ளலைப்
போல்வார் புவியில் யாரே

திருவாவடுதுறை ஆதீனத்தோடு நெருங்கிய தொடர்புடையவர். ஆதீன வித்துவானாக விளங்கிப் பலருக்கும் பாடஞ் சொல்லிய பெரும்புலவர். சேக்கிழார் பிள்ளைத்தமிழ் அவருடைய கவித்திறத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் புகழ்பெற்ற நூலாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும்புலவராக விளங்கிய மகாவித்துவான் தம் மாணவர்களிடத்துப் பேரீடுபாடும் அன்பும் கொண்டவர். ஆசிரியர் மாணவர் உறவுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய பேரறிஞர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. அவருடைய இருநூறாவது ஆண்டு இந்த ஆண்டு (6.4.1815 - 1.2.1876). அவர்தம் புலமையும் அன்பும் ஆசிரியர்களுக்கு எடுத்துக்காட்டாய் அமைவன.

(தொடரும்)

International Journal of Tamil Culture and Civilization

Thani Nayagam Adikalars Birth Centenary

1913-2013

Special Issue

Review by **P. Marudanayagam**

Dr. Xavier S. Thaninayagam Adikalar

The International Journal of Tamil Culture and Civilization is a biannual Publication by the International Institute of Tamil Culture and civilization, Inc (IITCC), 920 Leahy Circle East, Des Plaines, Illinois 60016, USA. Its chief Executive Editor, Dr Francis S. Muthu, is an eminent Tamil Scholar, a poet of high Claibre and a labour economist of considerable merit.

Prof. P. Marudhanayagam - Having earlier served as Professor and Head , Dept. of English, Pondicherry University and as Director, Pondicherry Institute of Linguistics and Culture, served as a Consultant, Dept. of Translation, Central Institute of Classical Tamil, Chennai. His specialization being comparative literature and literary theory. He has written 20 books in English, which include critical articles on Tamil, English, American and Canadian literature. Email ID: pmarudanayagam@yahoo.com

He was an adjunct professor of sociology at Loyola University of Chicago and at Triton College, River Grove, Illinois. As the Founder /President of the International Institute of Tamil Culture and civilization, a not-for- profit and tax – exempt organization, he has been inspired by Thani Nayagam Adikalar and feels obliged to carry forward the mission of the Tamil servant , who, by his lectures, writings and ceaseless activities promoted the cause of Tamil language, literature and culture throughout the world in the twentieth century. Adikalar founded a Quarterly journal called the Tamil Culture in 1952 and served as its editor- in-chief for fifteen years from 1952 to 1967. As a mark of honor done to that unique journal and its reputed editor, Francis Muthu has chosen the name "International Journal of Tamil culture and civilization,"

When Adikalar established the International Association of Tamil Research, explaining its objectives, he wrote, "During the golden age of the Tamils Known as the cankam period, under the auspices of the kings, the Tamil scholar's convened academies and developed the growth and riches of the Tamil literature and culture. The purpose of the I.A.T.R. is to bring all the Tamil Scholars from around the world and to publish their research papers done at the university levels and to introduce them to one another, and also to encourage and to co-ordinate the efforts of individuals or small institutions scattered throughout the world, very often isolated but sharing a common interest in Tamil. Researches should be done in different aspects of Tamil culture and with different perspectives, such as the history of the tamils, Tamil Linguistics, translations, lexicography and comparative Dravidian literature, epigraphy, Archaeology, political Science and fine arts etc. To mention a few."

Driven by the same desire Francis Muthu has been publishing articles that will reveal to the younger generations that the Tamils can be justly proud of a glorious heritage, the traces of which have been obliterated by our conquerors. As it has been often ointed out, the British have a deplorable record of simultaneously denying the existence of any worthwhile history in areas they colonized and destroying the cultures which embody that history. Because of its enslavement for a long time, the Tamil race has almost lost its history and the reed of the hour is to reconstruct it by all possible means, for, as, T.S. Eliot says,

A People without history

Is not redeemed from time

For history is a pattern of timeless moments. Since Atikalar's life. time mission was to serve as a messenger of Tamil Culture, we are beholden to him and the Tamils the world over thought it their duty to Celebrate his birth Centenary in 1913. The spring / summer 2013 issue of the International Journal of Tamil Culture and Civilization is a Commemorative volume on his birth centenary containing well – researched articles on the laudable work done by him.

Rev. Dr. H.S. David, a Colleague and friend of Adikalar, expresses in a brief note, his gratitude to the one who was responsible for his efforts to combine the Western Scholarly approach with the Oriental intuition in order to shape a worthy philologist. Amudhan Adigal who, as the Director of Thaninayagam Adigal Tamil Research Center, has organized and participated in Adikalar's Centenary Celebrations in many countries, in a very informative and insightful article, explains how Adikalar functioning as a seminal critic, has expanded the scope of Tamil Research and opened up vast areas for further work by future generations of scholars. Rev. Dr. V. Antony J. Alaharasan, a distinguished student of Adikalar and the author of a book on his life and work, recalls the steps that the great cultural ambassador took to introduce the wonderful Tamil ethos to the twentieth century world. Dr. Chelva kanaganayagam, who, till his recent sad demise, served as the Director of the centre for south Asian Studies at the University of Toronto, in his densely textured article, discusses how Thani Nayagam, devoting an entire book titled **Landscape and Poetry** to the idea of landscape and its relation to literary production, focuses on "the idea of space as a crucial category for rethinking the poetics and the experiential dimension of cankam poetry".

Dr. Francis S. Muthu, highlights the amazing discovery by Adikalar that the humanistic ideals were not only preached but also practiced by the ancient Tamils as early as the first two centuries of the Christian era. More importantly, unlike Seneca, the stoic Guru who is reported to have ignored in real life the ideals that he eloquently preached, Thani Nayagam lived the life of a Tamil humanist and a world citizen. The paper by P. Marudanayagam entitled "studies in Tirukkural: Thani Nayagam's Contribution" is concerned with the scholarly comparative study by Adikalar of Valluvar's vision of life with that of reputed Greco – Roman philosophers and with his convincing demonstration that the composition of Tirukkural was the result of the philosophical stage of the evolutionary experiences of the ancient Tamil people who lived one with nature in the five – fold divisions of landscape of the ancient Tamil Country. The volume includes a review of Rev. Dr. Thani Nayagam Centenary celebratory

Volume and a review, article on the complete works of Thaninayaga Adikalar published by poompuhar pathippagam.

The merit of the special issue is enhanced by the inclusion of the chelvanayagam Memorial lecture delivered by Adikalar in April 1980, four months prior to his death. The lecture on "Research in Tamil Studies: Retrospect and Prospect" proving to be a very valuable and comprehensive annotated bibliography, ends on a moving note:

> Not having in any country, a sovereign and independent Tamil State, we can hardly look to the present governments of India and Sri Lanka or any other state where Tamils live to embark on a promotion of Tamil studies... It is, therefore, left to the Tamil people themselves especially in Tamil Nadu and Sri Lanka to promote Tamil Studies and Tamil Research as far as it lies in their power. For such a programme, we the Tamil nation in Sri Lanka are better prepared than Tamil populations in any other country. But for research as well as for the conservation and development of culture, we need leisure, peace of mind and a happy existence. Unfortunately, our energies have to be spent in a daily battle for our rights and even our existence and identity as a partner nation in a bilingual state. However, our national contribution to Tamilology, our organization of the Fourth conference – seminar of Tamil Studies inspite of an adverse and hostile government, and our Jaffna University with its rich promise and burgeoning scholars, offer us encouragement, hope and trust. Under god, may the future be even more glorious than the past.

CONFUCIOUS

திருவள்ளுவர்

SOME PARALLELS BETWEEN CONFUCIANISM AND THIRUVALLUVAM

Dr. Singaravelu Sachithanantham

1. The Chinese moral Philosopher k'UNG FUTSE, or KONG FUZI (meaning 'Master K'ung or Kong'), who lived from 551 B.C. to 479 B.C., is commonly known as CONFUCIUS. His moral philosophy is contained in what are known as Lun yu or Analects, or 'literary extracts"), which are a collection or his sayings, compiled by his disciples shortly after his death in 479 B.C. The Lun Ÿū, or the Analects, of the sage Confucius, consist of twenty Books, each Book containing a varying number of the Master's sayings to one of his disciples.

Thus, for example, one of the Master's sayings in Book I reads as follows:

The Master said, "In guiding a state of a thousand chariots, approach your duties with reverence and be trustworthy in what you say; avoid excesses in expenditure, love your fellowmen and employ the labour of the common people only in the right seasons." Analects, I.5.

One of the master's sayings in Book II reads as follows:

"The Master said, "I do not see how a person who is untrustworthy in word can be acceptable. When a pin is missing in the Yoke – bar of a large cart or in the collar – bar of a small cart, how can be the cart expected to go?" Analects II. 22.

When the disciple Tzuyu asked the Master about filial piety,

Dr. Singaravelu Sachithanantham, Professor Emeritus, Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. Email-ID: velusingara2@yahoo.com

The Master said, "Nowadays for a person to be filial means no more than that he is able to provide his parents with food. Even hounds and horses are, in some way, provided with food. If a person shows no reverence, where is the difference?" Analects. II. 7.

1.1. The term *Confucianism* is used generally to refer to the **moral philosophy of Confucius,** and it is characterized as one of the most reasonable humanistic pattern of social conventions the world has ever known.

Confucius, as a great thinker, help up for all human beings a noble ideal, which required that **everyone ought to perfect his or her moral character by doing what is good without expecting any reward whatsoever either in the present life or the next. In other words, for the purpose of perfecting one's moral character, morality must be pursued for its own sake.** "Behind confucius's pursuit of ideal moral character lies the unspoken and therefore unquestioned assumption that the only purpose a man can have and also the only worthwhile thing a man can do is to become as good a man as possible. This is to be pursued for its own sake and with complete indifference to success or failure. Unlike religious teachers, Confucius could hold out no hope of rewards either in this world or the next." (D.C. Lau 1982:12)

1.2. *Confucianism* is not to be understood merely as a collection of *aphorisms* or *maxims*. On the contrary, it is a system of ideals and beliefs, which had been accepted by the Chinese people as true through the ages, and it also signifies a rationalized political and social order seeking to establish moral harmony in political and social spheres of life through an **ethical** approach, unlike that of legalists who have tried, but never really succeeded in building a nation through the rigid enforcement of law (Lin Yutang 1958: 18-19).

1.3. *Confucianism* is concerned solely with essential *humanistic* relationships, and it is not interested in metaphysics or mysticism. When Tzulu (one of Confucius's disciples) asked the Master how gods and spirits of the dead should be served, the Master answered that as he was not able even to serve man, how could he serve the spirits, and when Tzulu further asked about death, the Master answered that he did not understand even life, how could he understand death. Analects XI. 12

2.0. THIRUVALLUVAM: The term *thiruvalluvam (திருவள்ளுவம்),* or *Valluvam (வள்ளுவம்),* is used generally by Tamil scholars to refer to the overall moral philosophy enunciated by the ancient Tamil Poetic sage THIRUVALLUVAR (திருவள்ளுவர்) in his ethical treatise entitled THIRUKKURAL திருக்குறள் *('SACRED KURAL'),* Which is assigned by most of the Tamil scholars to the period between 450 – 550 A.D. (Zvelebil 1973: 156), though some scholars have argued for an earlied period.

2.1. The *Thirukkural* is a comprehensive Tamil poetic manual of ethics or morality, and it consists of 1330 *kurals* ('distichs', or 'couplets'). These couplets are divided into 133 sections, or chapters, each chapter containing ten couplets.

The kurals of the first 38 chapters are on *aram* (அறம்), or *dharma*, that is, morality of individuals as members of family, community or society.

The *kurals* of the next 70 Chapters are on principles of ethics governing *porul* (பொருள்), or *artha*, that is 'political – economy' including state, government, production and preservation of wealth; and

The kurals of the final 25 chapters are on *inbam* (இன்பம்), or blissful joy, that arises form the intimate relationship of morally true lovers and married couples.

The importance, or significance, of the structural arrangement of the *kurals* as indicated above is that, though any particular *kural* may be strikingly beautiful in terms of its message of morality, it also possesses a **structural relevance** to the other **kurals** within each chapter and the entire treatise (Zvelebil, 1973: 163-166).

Men and women in the totality of their social and political relationships as members of family, community, and state are depicted in the structurally – patterned *kurals*. Moreover, each member of the society is urged to attain everlasting fame (*pukal* புகழ்) through their active observation of not only the basic virtues such as abstaining from falsehood, fraud, and anger, and abstaining from causing injury to any other being, but also upholding the supreme virtues of kindness, friendship, and benevolence or grace of universal love towards all beings. *Thiruvalluvam* indeed glorifies the status of really learned, wise and perfect individuals known *as caanror* (சான்றோர்), that is, those who are intellectually as well as morally supreme persons.

The interrelationship of the *kurals* belonging to the three major divisions and the chapters within the divisions of the *Thirukkural* may be seen in the following selected examples:

"Where one's mind is free of any blemish, that alone is wholesome virtue *(aram)*; everything else is mere ostentation." (*Kural* 34)

(மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்;
ஆகுல நீர பிற.)

"Love endows one's body with life; where there is no love,
One is merely a bag of skin containing bones" (*kural* 80)

(அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.)

"The whole world will worship the feet of the ruler who
Protects the subjects by the sceptre of justice". (*kural* 544)

(குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.)

"Friendship of cultured persons yields more and more joy; it is like the recurring pleasure one gets from reading a good book (*kural* 783)

(நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு.)

"Smiling – face alone does not signify true friendship : Rather, it is the glowing joy felt in the innermost heart of a true friend". (*kural* 786)

(முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு.)

"The loving kinship that exists between me and my love is
Like the bond between body and soul." (*kural* 1122)

(உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.)

2.2. The overall philosophy of *Thiruvalluvam* contained in the 1330 *kurals* of the *Thirukkural* is not only of empirical, Practical or pragmatic kind, but it is also of universal appeal. *"There hardly exists in the literature of the world a collection of maxims in which we find so much lofty wisdom* (as in the Thirukkural): Such is the carefully considered view of Dr. Albert Schweitzer (1936:203).

3. PARALLELISMS BETWEEN CONFUCIANISM AND THIRUVALLUVAM:

(a) Both Confucius and Thiruvalluvar would seem to have held the view that everyone ought to perfect one's moral character without expecting any reward in the present life or the next. Confucius believed that morality must be pursued for its own sake.

The Master says: **"To Put service before the reward, is that not exaltation of virtue?"** Analects xii. 21.

The Tamil sage Thiruvalluvar also is of the view that a moral deed such as "the **charitable deed** (of helping someone by giving the person gifts or alms) **is good in itself even if there is no heavenly reward for it"** '. . . மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்று' (*kural* 222).

b) Confucius was of the view that human beings (at birth) are pretty much alike; but through their subsequent habits they gradually grow further and further apart from each other. (Analects XVII. 2; Lin Yutang 1958: 156).

Thiruvalluvar has also expressed an almost similar view: "All (human) beings are alike in respect of their birth, but their greatness (or the lack of it) varies by reason of the different kinds of their deeds." "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்," (*kural* 972).

c) Confucius has said: "If I want to use one phrase to cover all my teaching, I would say 'Let there be no evil in your thoughts'. Analects II. 2; Waley 1996:13).

Thiruvalluvar on his part has said: "The entire gamut of virtue *(aram)* comes into being when one's mind is free of any blemish (or evil thought). In the absence of purity of one's mind, everything else (relating to virtue) is mere ostentatious pretense." ("மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்; ஆகுல நீர பிற.") (kural 34).

d) Confucius has said: "Do not criticize other people's faults. Criticize your own faults." (Lin Yutang 1958 : 156).

Thiruvalluvar has posed the rhetorical question: "What blemish can befall a ruler who eradicates his own faults before finding faults with others?" - "தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின், என் குற்றமாகும் இறைக்கு?") (*kural* 436), It would seem to mean that a ruler can only claim to be faultless if he eradicates his own faults before finding faults with others.

e) Confucius has said: When the common people are only governed by the edicts (or laws) of the state and punishments, they may stay out of trouble from time to time, **but they will have no sense of shame**. Only if a person is guided by **virtue**, such a person will have a sense of shame". *Analects* II.3

Thiruvalluvar is also of the view that, while food etc., are all common needs of all creatures, only the 'sense of shame' is the human beings' unique characteristic attribute: ஊண் உடை எச்சம் உயிர்க்கு எல்லாம் வேறல்ல; நாணுடைமை மாந்தர் சிறப்பு (*kural* 1012). Furthermor, a person's evil deed is regarded as a 'shameful act' when that person feels ashamed by the evil deed: "கருமத்தால் நாணுதல் நாணு..." (*kural* 1011). Thiruvalluvar is also of the view that human beings who lack the sense of shame are mere wooden puppets that can only move their limbs by the pulling of the strings attached to them: நாண் அகத்து இல்லார் இயக்கம், மரப்பாவை நாணால் உயிர்மருட்டி யற்று (*kural* 1020).

f) Confucius has said: "Do not do unto others what you do not want others to do unto you (or Do not impose on others what yourself do not desire). In this way, you will be free from other's ill – will in a family or in a state." *Analects* XII. 2; Lin Yutang 1958:100.

Thiruvalluvar on his part has said: One ought to refrain from doing evil to others if he or she does not want to be tormented by the (retributive) evil: "தீப்பால தான் பிறர்கண் செய்யற்க, நோய்ப்பால் தன்னை அடல் வேண்டாதான்." (*kural* 206).

Furthermore, Thiruvalluvar has devoted a whole chapter (Chapter 32) of ten *kurals* in his work to the ethical principle of not causing harm to anyone (இன்னா செய்யாமை), and they include the following:

"One shall not do unto others what one knows to be harmful". – *kural* 316:
"இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை வேண்டும் பிறன்கண் செயல்."

"It is a supreme virtue not to consciously cause any harm to anyone at any time"—*kural* 317: "எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம் மாணா செய்யாமை தலை."

"How is it that one, who knows what is harmful to one's own life, goes on to do that harm to other lives?"- *kural* 318: "தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ மன்னுயிர்க்கு இன்னா செயல்?"

g) One of the most fundamental axioms of *Confucianism* relates to the virtue of being **benevolent towards all beings** as an effective means of developing and perfecting one's true moral character. If an individual is **benevolent** (that is, being kind and actively friendly, helpful and charitable to others), he or she will naturally care for and work for the good of **all** people. If a ruler, or leader of a government or state, is benevolent, that government or state will naturally care for and work for the good of **all** the people in the state, for Confucius was of the view that politics is, or ought to be, merely an extension of an individual human being's moral character.

Confucius has said in Book IV of the *Analects:* "**Benevolence** is the most beautiful moral principle" (*Analects* IV. 1); and " If a person sets his heart on **benevolence**, he or she will be free from all evil" (*Analects* IV.4).

It would seem that the Tamil sage Thiruvalluvar has also enunciated a strikingly similar or parallel moral principle in his treatise *Thirukkural*, and the relevant *kurals* are to be found in its Chapter 25, which is entitled *ARUL –UDAIMAI* (அருளுடைமை). The term *arul* (அருள்) signifies **benevolence, or the grace of universal love**. Thiruvalluvar glorifies benevolence or grace of universal love, as the most important wealth of all the wealth in the universe: "அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்..." (*kural* 241) and, besides assuring that those who are benevolent and loving towards all beings are completely free of any suffering: "அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை..." (kural 245), he also declares that benevolence is, indeed, the supreme source of all virtues: தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின், அருளாதான் செய்யும் அறம்." = 'பிற அறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலமென்பது பெற்றாம்' – பரிமேலழகருரை (kural 249).

4. CONCLUSION : After having reviewed some examples of the parallelisms between **Confusionism and Thiruvalluvam,** it would seem reasonable to conclude that both the eminent moral philosophers – Confucius and Thiruvalluvar – fervently believed in the efficacy of practical and pragmatic ethical approach for the purpose of urging human beings to develop and perfect their moral character, so that they could live harmoniously and happily with their fellow members of the family, community, and State.

தொல்காப்பியக் கல்வி

இ. சுந்தரமூர்த்தி

இலக்கண வளமையும் இலக்கியச் செறிவும் தொன்மையும் தனித்த தன்மையும் கொண்டு சிறந்து விளங்கும் மொழிகளைச் செவ்வியல் மொழிகள் என்பர். உலகில் ஏறத்தாழ 6000மொழிகள் உள்ளன. அவற்றுள் ஆறு மொழிகள் செவ்வியல் தகுதிப்பாடுடைய மொழிகளாக மொழிநூல் வல்லுநர் கருதுவர். கிரேக்கம், இலத்தீன், வடமொழி, தமிழ், ஹீப்ரு, சீனம் ஆகிய மொழிகளைச் சிறந்த செவ்வியல் மொழிகளாகக் குறிப்பிடுவர்.

தமிழ் மொழியில் தோன்றிய *தொல்காப்பியம்* தொன்மையான நூலாகும். 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய்' இக்காலத் தன்மைக்கும் ஏற்ப விளங்குவது தொன்மை நூலான *தொல்காப்பியம்.*

தனிச்சிறப்பு

இலக்கணமாகவும், மொழிநூலாகவும், இலக்கியக் கூறுகளைக் கொண்ட கவிதையியல் பற்றி எடுத்துரைக்கும் நூலாகவும் *தொல்காப்பியம்* விளங்குவதை அறிஞர்கள் புலப்படுத்தியுள்ளனர். காலந்தோறும் பல்வேறு ஆராய்ச்சிகளுக்குரியதாய் விளங்கும் தொல்காப்பியம் மொழிக்கு இலக்கணம் கூறும் நூலாக மட்டும் அமையாது வாழ்விற்கு இலக்கணம் கூறும் நூலாகவும் திகழ்வது *தொல்காப்பியத்தின்* தனிச்சிறப்பு எனலாம்.

தொல்காப்பியக் கல்வியின் தேவை

இலக்கிய மொழிவரலாற்றில் உள்ள முந்தைய மொழிக் கூறுகளைத் தொகுத்தும் வகுத்தும் நிகழ்கால மொழிக்கூறுகளை ஆராய்ந்துரைத்தும் எதிர்காலத்திற்கும் பயன்படும் வண்ணம் கருதுகோள்களை அமைத்தும் இக்காலச் சூழலுக்கும் பொருந்துமாறு அரிய பொருள்களை விளக்கிக்காட்டும் ஆய்வு நெறிசார்ந்த அரிய நூலாகத் திகழ்வது *தொல்காப்பியமாகும்.* எனவேதான் தொல்காப்பியக் கல்வி இன்றும் தேவைப்படுவதாக உள்ளது.

புலந்தொகுத்தோன்

தமிழ்மொழியின் அமைப்பினையும், வாழ்வியலோடு பொருந்திய இலக்கியக் கட்டுக் கோப்பினையும் உணர்ந்து தொல்காப்பியர் தமக்குமுன் இருந்த பல்துறை சார்ந்த

முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம் மற்றும் தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம். இன்றைய தலைசிறந்த தமிழ் அறிஞர்களுள் ஒருவர்

அறிஞர்களின் படைப்புகளையும் மக்கள் வழங்கிய வழக்காறுகளையும் பலவற்றையும் பயின்று உரிய சான்றுகளைத் திரட்டித் *தொல்காப்பியத்தை* உருவாக்கினார். எனவேதான் இவரை இந்நூலின் பாயிரம் 'புலந்தொகுத்தோன்' எனப் பாராட்டிப் போற்றும்.

நாட்டு வழக்கிலும் ஏட்டு வழக்கிலும் பயிலப்பெற்ற தமிழ்மொழியின் அடிப்படை அமைப்பினை விளக்கும் வகையில் உயிரெழுத்து, மெய்யெழுத்து, சார்பெழுத்து என்ற எழுத்துக்களின் நெடுங்கணக்குவரிசை, அவை மொழியில் தோன்றும் பாங்கு, மொழி ஒலியைப் பேச்சுறுப்புகள் வெளிப்படுத்தும் முறை ஆகிய இலக்கணக் கூறுகளை எழுத்ததிகாரத்தில் உள்ள நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் ஆகிய இயல்களில் கூறுவார்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் மொழியியலில் கூறலாகும் பல்வேறு தொடரியல் கூறுகளைக் காணமுடிகின்றது. கருத்தாடலியல் (Discourse), பொருண்மையியல் (Semantics), அகராதியியல் (Lexicography), சமூக மொழியியல் (Socio linguistics) முதலாய பலகூறுகளையும் ஒப்பு நோக்கு நிலையில் காணமுடியும். எனவே இன்றைய மொழியியல் ஆராய்ச்சிக்கும் தொல்காப்பியக் கல்வி இன்றியமையாததாக விளங்குகின்றது.

மொழிக்காப்பு

தமிழ்ச் சொற்களோடு வடசொற்கள் கலக்கும்போது அவற்றை எவ்வாறு எழுத வேண்டும் என்பதற்கான நெறியையும் தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார்.

> வடசொற் கிளவி வடவெழுத்து ஓரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே

என்பது விதியாகும். பிறமொழிகளோடு கலந்து பேசுகின்ற இன்றைய சூழலில் இந்நூற்பா மொழிக்காப்பு நூற்பாவாக விளங்குகின்றது. இது தமிழின் தனித்தன்மையையும் அமைப்பையும் போற்றிக் காக்கின்ற இலக்கண நெறியாகும்.

மொழியின் வளர்ச்சியைக் காட்டுவது அகராதியில் அமைந்துள்ள சொற்களாகும். இந்த நூற்றாண்டில் செழித்து வளர்ந்துள்ள தமிழ் அகராதிக் கலைக்குத் தொல்காப்பியர் வழங்கியுள்ள கொடை சொல்லதிகாரத்தில் வரும் இடையியலும் உரியியலுமாகும்.

சொல் உருவாக்கப்பட்டது பொருளை அறிவித்தற்கேயாகும். பொருளை அறியாத நிலையில் சொல் தோன்றாது. தொல்காப்பியர் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பார். இது உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் பொதுவானதாகும்.

சொல் பொருளையும் விளக்கும்; தன்னையும் அறிவிக்கும். 'பண்பு' என்ற சொல்லிற்குப் பொருளும் உண்டு. அது என்ன வகையான சொல் என்பதையும் சுட்டும்.

இதனைத் தொல்காப்பியர் 'பொருண்மை தெரிதல்' 'சொன்மை தெரிதல்' எனப் பாகுபடுத்திக்காட்டிச் சொல்லின் இயல்பைப் புலப்படுத்துவார்.

சொற்களின் வகை

சொற்களின் வகைகளைப் பாகுபடுத்துவது எளிதானதன்று என்பர் மொழியியல் அறிஞர். The difficulty of classifying the parts of speech is so great that no satisfactory arrangement has yet been made என்பர். ஆனால் தொல்காப்பியர் பெயர், வினை, இடை, உரி என நான்காக வகுத்துக் கொண்டார். மேலும் பெயர், வினை என்ற பெரும்பிரிவினுள் எல்லாச் சொற்களையும் அடக்கலாம் என்றார்.

இலக்கணம் என்பது இயல்பு, தன்மை, அழகு என்று பொருள் பயத்தலின் தமிழ் மொழியின் இயல்பினையும் தன்மையினையும் அழகினையும் தக்கவகையில் புலப்படுத்திய ஆற்றலையும் தெளிவையும் *தொல்காப்பியத்தில்* காணலாம்.

தொல்காப்பியம் முழுமையான இலக்கணம்

ஒலிக்கூறுகளால் உருவாக்கப்படும் சொல்லின் வகைகளையும் அவை தொடர் மொழியில் வழங்குவதற்குரிய வழிமுறையினையும் விளக்கமாகவும் விரிவாகவும் சொல்லதிகாரத்தில் கூறியுள்ளார். தமிழ்மொழியின் தொடர் அமைப்பினை விரிவாக ஆராய்ந்து விளக்க இலக்கணம் (Descriptive Grammar) படைத்துள்ளார்.

கிளவியாக்கத்தில் அல்வழித் தொடர்களுக்கும் பின்வரும் இயல்களில் வேற்றுமைத் தொடர்களுக்கும் பெயர், வினை, இடை, உரியியல் ஆகிய பகுதிகளில் தனிச்சொற்களுக்கும் இலக்கணம் கூறினார். விடுபட்ட இலக்கணக் கூறுகளை எச்சவியல் என அமைத்து முழுமை செய்தார்.

இன்றைய மொழியியலாளரின் கருத்துப்படி எழுத்ததிகாரம் என்பது தமிழின் ஒலியனியல் (Phonology) பேச்சொலியியல் (Phonetics) உருபன் ஒலியியல் (Morpho Phonemics) ஆகியன பற்றி எடுத்துரைப்பதாம்.

மொழியியலாளர் கூறும் உருபனியல் (Morphology) தொடரியல் (Syntax) என்ற பகுதிகளும் சொல்லதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன.

மக்கள் வாழ்வியலை மையமாகக் கொண்டு அமைவது தொல்காப்பியப் (அகம்.புறம்) பொருளதிகாரம். இலக்கிய ஆக்கத்திற்கு வேண்டிய உணர்ச்சி, கற்பனை வடிவம் முதலாயின பொருள் அதிகாரத்தில் உவமை, மெய்ப்பாடு ஆகிய இயல்களில் கூறப்படுகின்றன. எனவே *தொல்காப்பியம்* ஒரு முழுமையான இலக்கணமாகவும் (Grammar) பாவியலாகவும் (poetics) அமைந்து தமிழரின் பண்பாட்டுச் சின்னமாக ஒளிர்கிறது.

வாழ்நெறி

எழுத்தும் சொல்லும் மொழியைப் பற்றியனவாகும். பண்பட்ட ஒரு மொழிக்கு வளமும் வாழ்வும் அளிப்பது இலக்கியமாகும். இலக்கியப் படைப்பும் பயிற்சியும்

வாழ்க்கை நெறிகளை அடிப்படையாகக் கொண்டன. தொல்காப்பியரின் பொருளதிகாரம் பழந்தமிழரின் வாழ்நெறிகளைக் கூறுவதாகும்.

பண்டைத் தமிழரின் வாழ்வு, தொழில், பொருள், சமூகநிலை, சமயநெறி, ஆட்சிமுறை, கடவுட்கொள்கை, அரிய பழக்க வழக்கங்கள் முதலாயினவற்றைத் தெளிவுறுத்தும் பகுதி பொருளதிகாரமாகும். உவமை , உத்தி, நடை, வடிவம் என இலக்கியக் கொள்கைகளின் விளக்க நூலாகவும் *தொல்காப்பியம்* திகழ்கிறது.

நானிலத் தெய்வங்களை நில அடிப்படையில் *தொல்காப்பியம்* கூறும்.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெரும்புனல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

என்பது *தொல்காப்பியம்*.

பல்துறைப் புலமை

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே உயிர்களை ஆறுவகையாகப் பகுத்த நெறியும் தொல்காப்பியரின் பல்துறைப் புலமையைக் காட்டும்.

தொன்மைமிக்க நூலான *தொல்காப்பியத்தை*யொட்டியே இன்றுவரை பல இலக்கண நூல்கள் தோன்றிக்கொண்டுள்ளமை அந்நூலின் செறிவைக்காட்டும். பின்தோன்றிய இலக்கண நூல்களுக்கெல்லாம் இதுவே முன்னோடி. ஐந்திலக்கணத்தைப் பற்றிப்பேசும் அரியநூல் இதுவே.

தொல்காப்பிய நீரோட்டம் இன்றுவரை ஒவ்வொரு இலக்கிய வகைமைக் கூறுகளிலும் இருப்பதைக் காணமுடிகின்றது.

இலக்கணத்தினை விளக்கவியல், வரைவியல், ஒப்பியல், வரலாற்றியல் என்று திறனாய்ந்து பகுப்பர். *தொல்காப்பியத்தில்* இன்று பேசும் பல்வேறு புதுமை வகைகளும் பொலிவுடன் திகழ்கின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் இயல்பே எனும் நெறியைத் தமிழுக்குத் தந்தவர் தொல்காப்பியர்.

பழமையும் புதுமையும் இணைந்த வரலாற்றுக் கருவூலம் *தொல்காப்பியம்*. அது இலக்கண இலக்கியமாகத் திகழும் தொன்மைச் செவ்வியல் நூல். தொல்மரபு போற்றும் *தொல்காப்பியம்* பேணிக்காக்க வேண்டிய அரிய கருவூலம் ஆகும்.

தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய *நன்னூல்* எழுத்தும், சொல்லும் பற்றிய கோட்பாடுகளை விளக்கியுரைக்கும். தமிழ் இலக்கணிகளான தொல்காப்பியரும்

நன்னூலை இயற்றிய பவணந்தியாரும் சிறந்த மொழியியற் கோட்பாடுகளைத் தத்தம் நூல்களுள் விளக்கியுள்ளனர் என்பதை மொழியியல் அறிஞர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர். முத்துவீரியம் நூலாசிரியர் *மொழியியல்* என்னும் சொல்லைப் பதவியல் என்னும் பொருளில் முதன்முதலில் கையாளுவார்.

மொழியியல்

தொல்காப்பியர்கூறும் பிறப்பியல் இன்றைய மொழியியலார்கூறும் ஒலியியல் பற்றியதாகும். எழுத்துகளின் பிறப்பு, பிறக்கும் இடம், முறைபற்றி இவ்வியல் விரிவாகப் பேசும். நன்னூலாரும் இதனைப் பின்பற்றி எழுத்தியலில் கூறுவார்.

தொல்காப்பியரின்

உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப் (தொல்.எழுத்து.83)

தொடரியல், பொருண்மையியல், அகராதியியல், கருத்தாடலியல் ஆகியவைகளை ஒன்பது இயல்களில் விவரிக்கின்றது. அவைகளில் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், எச்சவியல் ஆகிய நான்கு இயல்களும் மிகுதியும் தொடரியல் நோக்கு உடையவை. ஏனைய ஐந்து இயல்களும் மிகுதியும் சொல்லியல் நோக்கு உடையவை. இருந்தாலும் தொடரியல் நோக்குடைய இயல்களில் சில தொடரியல் செய்திகளும் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தகுந்தது என்பார் செ.வை.சண்முகம், தொல்காப்பியத் தொடரியல்.

தொல்காப்பியம்கூறும் எழுத்துப் பிறப்பியல் கூறுகளை மொழியியல் நோக்கில் அறிஞர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் ஒவ்வொரு எழுத்திற்கும் விரிவாகக் கூறியுள்ளார்.

தொல்காப்பிய ஆராய்ச்சி

அறிஞர் இராகவையங்கார் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டிற்குமுன் *பொருளதிகார ஆராய்ச்சி* என்னும் அரிய நூலைப் படைத்தார். அந்நூல் யாழ்ப்பாணம் திரு. காந்தன் அவர்கள் வழங்கிய பரிசு பெற்ற நூலாகும். அன்றுமுதல் பல அரிய ஆராய்ச்சி நூல்கள் பொருளதிகாரம் குறித்து வெளிவந்துள்ளன. அறிஞர் பா.வே.மாணிக்கநாயக்கர் *தொல்காப்பியப்* பொருளதிகாரத்தில் தமக்கு எழுந்த ஐயங்களைக் கடிதங்கள் மூலம் இராகவையங்காருக்குத் தெரிவித்தார். இராகவையங்காரும் மடல் வழியே விளக்கங்கள் அளித்தார். இவை *தொல்காப்பிய* அலகைத் தொடர் வரிசையில் நூலாகவும் வெளிவந்தன.

திணை விளக்கம்

இந்த நூற்றாண்டில் பொருளதிகாரம் குறித்த ஆய்வுகளில் புதிய அணுகுமுறைகளும் தென்படுகின்றன. அறிஞர் ஏ.கே.இராமானுஜம், கலாநிதி

கைலாசபதி, கலாநிதி சிவத்தம்பி முதலாய அறிஞர் பெருமக்கள் திணை சார்ந்த புதிய ஆய்வுக் கோட்பாடுகளை உருவாக்கினர். இவ்வகையில் அறிஞர் அய்யப்ப பணிக்கரின் Hardy's wessex and Tinai Poetics என்னும் ஆய்வு குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது.

சுற்றுப்புறச்சூழல் கோட்பாடு

அய்யப்பபணிக்கர் மலையாளத்தில் எழுதிய திணைசங்கல்பம் அகப்பொருளும் புறப்பொருளும், திணை விவஸ்தையும் ரூபமஞ்சரியும் முதலான கட்டுரைகள் புதிய அணுகுமுறையைக் காட்டுவன.

தொல்காப்பியர் வாழ்ந்த காலக்கட்டத்தில் இருந்த தென்னிந்தியப் புவியியல் இயற்கையை ஆதாரமாக்கித்தான் ஏழு அகத்திணைகளும் ஏழு புறத்திணைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. பூகோளத்தின் ஏனைய பாகங்கள் கவனத்தில் வரும்போது கூடுதல் திணைகளை ஏற்றுக் கொள்வது அதாவது திணைப் பெருக்கவிரிவு நியாயமானதே' என்பர் அய்யப்பபணிக்கர்.

தொல்காப்பியத்தில் இலக்கியம் முழுமையும் அகம், புறம் என்று பிரிக்கப்பெற்றிருக்கிறது. அகம் என்றால் உட்புறம் சம்பந்தப்பட்டது தனிநபர் சார்ந்தது. உளவியல் பாற்பட்டது. மென்மை உணர்வு, மோகனம், சுயசார்புடையது என்றெல்லாம் கூறலாம்.

புறம் என்றால் வெளி; எல்லையற்றது. சமூகவியல் சம்பந்தப்பட்டது. தீவிர உணர்ச்சி வெளிப்பாடு. பொருள் சார்ந்தது என்றெல்லாம் குறிப்பிடலாம். ஒவ்வொன்றிற்கும் முறையே ஏழு திணைகள் பொருளதிகாரத்தில் விதிக்கப்பெற்றிருக்கின்றன. இது ஓர் எடுத்துக்காட்டுமட்டும் தான். இந்தக் கோட்பாட்டை மனித நிலைகளின் காலதேச நிலைகளுடன் தொடர்புபடுத்தும் அழகியல் கோட்பாட்டை, தேவையான விரிவாக்கம், திருத்தங்களுடன் ஒருபடைப்பைத் திறனாய்வு செய்யப் பயன்படுத்தலாம்.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் திராவிட இலக்கிய இயலின், ஆய்வுச் சித்தாந்தத்தின் மூலக்கருவாகும். அதை விரிவாக்கி எடுத்தால் ஒருவேளை உலகத்தில் மிகவும் பழமையான மகத்தான ஒரு சுற்றுப்புறச் சூழல் அழகியல் கோட்பாடு நமக்குக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்பார் அய்யப்பபணிக்கர் (ஐயப்பபணிக்கரின் ஆளுமையும் சிலபடைப்பு மாதிரிகளும் - 2006 - தமிழில் நீலபத்மநாபன்). அய்யப்பபணிக்கரின் 'தொல்காப்பியத்தின் சமகால முக்கியத்துவம்' (காலச்சுவடு அக்டோபர் 2006), கா.சிவத்தம்பியின் 'தமிழ்க்கவிதை வரலாற்றில் தொல்காப்பியக் கவிதையியல் - சில வினாக்களும் சிக்கல்களும்', க.பாலசுப்பிரமணியனின் 'இலக்கியத்தில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இடம்', முதலாய கட்டுரைகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

தொல்காப்பிய ஆய்வில் புதிய துறைகளோடு பொருத்திப் பார்க்கும் தேவை இன்று அறிவியல் வளர்ந்த சூழலில் இன்றியமையாததாக அமைகின்றது.

கட்டமைப்பு

எழுத்து, சொல், பொருள் என மூன்று பிரிவுகளிலும் தொல்காப்பியர் தாம் கூறப்போகும் செய்திகளைத் திட்டமிட்டு முறைப்படுத்தினார். அப்பிரிவுகளை ஒன்பது ஒன்பது குறும்பிரிவுகளாகப் பகுத்தார். இவற்றிற்கேற்ப நூற்பாக்களை முறைப்பட வைத்தார்.

தொல்காப்பியத்தின் கட்டமைப்பினை இன்றைய கணினிமுறை அமைப்போடும் (Top – Down programming) பொருத்திக் காட்டுவது புதிய முயற்சியாக உள்ளது. (‘தொல்காப்பியத்தின் கட்டமைப்பு' - ப.பாண்டியராஜா, *தொல்காப்பியம்- சங்க இலக்கியம் எழுத்து சொல்மரபுகள் - புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவனம், 2012).*

மொத்த அமைப்பையும் கட்டமைத்துக்கொண்டு அதன் ஒவ்வொரு பகுதியையும் உருவாக்கத் தொல்காப்பியர் பின்பற்றிய முறை இன்றைய அறிவியல் நெறியோடு ஒத்துவருவதை உணரலாம் என்பர். அடிமட்டச் செய்திகளைச் சேகரித்து அவற்றைத் தொகுத்துச் சீராக்கி அவற்றுக்கிடையே இணைப்பு உண்டாக்கி மேலேழுப்பும் முறையே இது என்பர். தமக்குத் தேவையான செய்திகள் நாடகவழக்கிலும் உலகவழக்கிலும் எவ்வாறு பொதிந்து கிடக்கின்றன என்பதை ஆராய்ந்து அவற்றிலுள்ள செய்திகளையும் தொகுத்து முறைப்பட வைக்கும் பகுப்பாய்வு நெறி என்பர்.

தொகுப்புநெறி

